www.tamilarangam.net

# தமிழீழத்தின் குரல்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்
செயலதிபர்,
தோழர் க. உமாமகேஸ்வரன்,

## "தமிழீழத்தின் குரல்"

வானொலி மூலம்
நாட்டு மக்களுக்கு

## ஆற்றிய உரை.

வெளியீடு: 5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> சிங்கள முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து எமது பொது எதிரிக்கும் அவனுடைய எஜமானர்களாகிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிராக, ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதன் மூலம் தான் நாம் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியும்.

### தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்
### செயலதிபர்
# உமாமகேஸ்வரன்
### அவர்கள்
# "தமிழீழத்தின் குரல்"
### வானொலி மூலமாக நாட்டு மக்களுக்கு
### 7-9-85 அன்று ஆற்றிய உரை:

எமது அன்பான தமிழீழ மக்களே! இன்றைக்கு எமது நாட்டின் ஒரு புறத்தில் கட்டுப்பாடு இழந்த சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித்தனங்களால் ஒன்றுமறியாத பல அப்பாவித் தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல கிராமங்கள் தீயிட்டு நாசமாக்கப் பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் தங்களது சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக்கப்பட்டுள்ளார்கள்.

மறுபுறத்தில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகின்றோம் என்று சொல்லிக் கொள்கின்ற சில விடுதலை இயக்கங்கள் தனியார் வீடுகளில் கொள்ளையடித்தல், வர்த்தகர்களைக் கடத்திச் சென்று பணயம் வைத்துப் பணம் பறித்தல், தனியார் வாகனங்களைக் கடத்துதல் முதலான மக்கள் விரோதச் செயல்களைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இவை எல்லாவற்றிலும் சிகரம் வைத்தாற்போல் சில தினங்களுக்கு முன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. தருமலிங்கம், திரு. ஆலால

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுந்தரம் ஆகியோர் ஈழத் தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஒரு இயக்கத்தால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பில் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதுபொருத்தமானதாக இருக்குமென்று எண்ணுகிறோம்.

எமது அன்பான தமிழீழ மக்களே! நாம் ஏற்கனவே வானொலியில் ஆற்றிய உரையிலும்...;

"உலகத்திலே தமிழனுக்கு என்று ஒரு நாடு வேண்டும் என்பதற்காகவோ, ஏதோ போராடவேண்டும் என்பதற்காகவோ அனாவசியமாக ஒரு நாட்டைத் துண்டாடவேண்டும் என்பதற்காகவோ, தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடவில்லை" என்பதை மிகத் தெளிவாக வலியுறுத்தியிருந்தோம்.

சிறிலங்காவில் மாறிமாறி வந்த ஆட்சியாளர்களால் பறிக்கப்பட்ட எமது மக்களின் அடிப்படை உரிமைகளை மீட்பதற்காக எமது கடந்தகால அரசியல் தலைவர்களும், மக்களும் பல்வேறுபட்ட அறப்போராட்டங்களை நடத்தி பல்வேறு அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்தி, இவையனைத்தும் தோல்விகண்ட நிலையில் "இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டுமென்றால் தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு ஒன்றை நிறுவுவதன் மூலம் தான் சாத்தியமாகும்" என்று முடிவெடுத்த பின்தான், அதற்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.



இன்றைக்கு இந்தப் போராட்டக் களத்திலே நாங்கள் ஏந்தியுள்ள ஆயுதங்கள் சிறிலங்கா அரசையும், அதைக் காத்து நிற்கின்ற அதன் கூலிப்படைகளையும் நோக்கிக்குறி வைக்கப்பட வேண்டுமே தவிர ஒன்றுமறியாத அப்பாவி மக்களை நோக்கி என்றைக்குமே திரும்பக் கூடாது என்பதை மிக உறுதியாக 'வலியுறுத்தியிருந்தோம்.

வலியுறுத்தியதோடு மட்டுமல்ல மக்களை நோக்கி ஆயுதங்கள் திருப்பப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிராக நாம் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

கடந்த காலத்தில் நாயாறு, கொக்கிளாய், அநுராதபுரம், வவுனியா பகுதிகளில் ஒன்றும் அறியாத அப்பாவி சிங்கள மக்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் படுகொலை செய்தபோது நாம் அதை வன்மையாகக் கண்டித்தோம்.

எமது எதிரி சிறிலங்கா அரசும், அதன் கூலிப்பட்டாளங்களுமே அன்றி அப்பாவிச் சிங்கள மக்கள் அல்ல என்பதை நாம் மிகத் தெளிவாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். எமது எதிரி ஏகாதிபத்தியச் சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டு எமது போராட்டத்தை நசுக்கிவிடுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் நாம் சிங்கள மக்கள் அனைவரையும் எமது எதிரியாகக் கருதுவோமாக இருந்தால், இனவாதம் ஒன்றையே மூலதனமாகக் கொண்ட எமது எதிரிக்கு அது மேலும் வாய்ப்பாகவே அமையும். இதை மிகத் தெளிவாகவே புரிந்துகொண்ட நாம் சிங்கள முற்போக்குச் சக்திகளுடன் எமது உறவை வளர்த்துக்கொண்டோம்.

www.tamilarangam.net



சிங்கள முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து எமது பொது எதிரிக்கும் அவனுடைய எஜமானர்களாகிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிராக, ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதன் மூலம்தான் நாம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெற்றியடைய முடியும்.

அதைவிடுத்து நாமும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகளின் பிடிகளுக்குள் சிக்கி தமிழன், சிங்களவன் என்ற இனவாதத்தைப் பேசியே எமது விடுதலைப் போராட்டத்தை வெறும் இனவாதப் போராட்டமாகத் தொடர்ந்தும் முன்னெடுப்போமாக இருந்தால் மேலும் மேலும் எமது மக்கள்தான் நாசமாக்கப்படுவார்கள்.

இரண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈழத் தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஒரு இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நாம் ஒரு சாதாரண சம்பவமாகக் கருதிவிட முடியாது.

படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான திரு. தருமலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இருந்த முற்போக்குக் கருத்துக் கொண்ட தலைசிறந்த அரசியல்வாதி ஆவார். இலங்கை—சோவியத் நட்புறவுக் கழகத்தின் தலைவராக இருந்த அவர் தென்னிலங்கையிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் தொடர்ச்சியான உறவை வைத்திருந்தவர். 1977 ஆம் ஆண்டுக்குப்பின் முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சியைப் பதவியிலிருந்து தூக்கி எறிவதற்கு சனநாயக முறையில் தென்னிலங்கை முற்போக்கு அணிகளுடன் சேர்ந்து செயற்பட்டதோடு, அங்குள்ள முற்போக்குச் சக்திகளுக்கு இடையில் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கி, தோழர் சரத்முத்வேட்டுகம பாராளுமன்றத்திற்கு வருவதற்கு முன்னின்றவர். தமிழீழ விடுதலைப் போராட்டம் தனித்து ஒரு இனவிடுதலைப் போராட்டமாக மட்டும் இருக்காது, வர்க்க விடுதலைப் போராட்டமாகவும் இருக்க வேண்டும் என்பதிலும் அதிக அக்கறை கொண்டிருந்தவர்.



தமிழீழப் போராட்டத்திலுள்ள இவரைப் போன்ற முற்போக்குவாதிகளை படுகொலை செய்தவர்கள் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளேயாவர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை பொறுத்தவரை நாம் இந்தத் தனி மனிதப் படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்கும் அதே சமயத்தில் இக்கொலைகளைச் செய்தவர்களையும், அவர்களின் செயல்களை மூடி மறைப்பவர்களையும், மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி அவர்களின் முகமூடிகளைக் கிழித்தெறிய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தப் படுகொலையின் முக்கிய நோக்கம் இந்தியரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போடுவதுதான். எப்படியாவது இந்தப் பேச்சுவார்த்தையைக் குழப்பி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கரத்தை பலப்படுத்த வேண்டும் என்பதில் முனைந்து நின்று செயல்படுகின்ற அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் உளவுப்படையான சீ.ஐ.ஏ.யும் நன்கு திட்டமிட்டே ஈழத் தேசிய விடுதலை முன்னணியூடாக இந்தப் படுகொலையை நடத்தியிருக்கின்றது.

ஈழத்தேசிய விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை, இந்திய அரசு திம்புப் பேச்சுவார்த்தைக்கு ஒழுங்கு செய்தபோது முதன்முதலில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளப் போவதாக அறிவித்தது அவர்களேதான். பின்னர் நாம் இதுபற்றி மௌனமாக இருப்பதைப் பார்த்துவிட்டு தாங்கள் பேச்சுவார்த்தையில் கலந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்ளப் போவதில்லை என்று மறு அறிக்கைவிட்டார்கள். அதன்பின்பும் நாங்கள் மௌனமாக இருக்கவே இந்தியஅரசு தங்களை நிர்ப்பந்திப்பதாகக் கூறிக்கொண்டு பேச்சுவார்த்தைக்குச் சென்றார்கள். எம்மைப் பொறுத்தவரை நாம் இப்பேச்சுவார்த்தைமூலம் எமது மக்களின் அடிப்படை உரிமைகள் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் வழங்கப்படாது எனத் தெரிந்தும் உலகநாடுகளின் மத்தியிலும், இந்திய அரசிடமும், எமது கோரிக்கையை நியாயப்படுத்தவும், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் முகத்திரையை கிழித்தெறியவுமே இத்தகைய பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டோம்.

எந்த ஈழத்தேசிய விடுதலை முன்னணி பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முடியாது என அறிக்கை விடுத்ததோ, அதே ஈழத் தேசிய முன்னணியே பேச்சுவார்த்தை மேடையில் அரசு தரப்புப் பிரதிநிதிகளைத் தாமே முதலில் வரவேற்றுப் பேசவேண்டுமென கேட்டுக் கொண்டது.

திம்புவில் நடந்த இந்தப் பேச்சுவார்த்தையின்போது எப்படியாவது இந்திய மத்திய அரசுக்கும், தமிழீழப் போராளிகள் தரப்பிற்குமிடையில் விரோதத்தை வளர்த்துவிட வேண்டுமென்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா திட்டமிட்டிருந்தார். அத்திட்டத்தை சீ.ஐ.ஏ. இயக்கத்தின் மூலமாக நிறைவேற்றிக் கொண்டார். சீ.ஐ.ஏ. இயக்கம் தன்னுடைய பிரதிநிதியாகச் சென்னையிலிருந்து இயங்கும் சந்திரகாசன் மூலமாக ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் நெருங்கிய நண்பரான வழக்கறிஞர் சத்தியேந்திராவை ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் பிரதிநிதிகளுள் ஒருவராகத் திம்புவிற்கு அனுப்பி வைத்தது. ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் சார்பாகக் கலந்து கொண்ட சத்தியேந்திரா, ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் நோக்கத்தை மிகச் சுலபமாக நிறைவேற்றிவிட்டு இலண்டனுக்குப் பறந்து சென்றுவிட்டார். சீ.ஐ.ஏ. வகுத்துக் கொடுத்த திட்டத்தின்படியே இந்திய அரசுடன் மோதி இந்திய அரசுக்கும், தமிழீழப் போராளிகளுக்கும் இடையில் மனக்கசப்பை உண்டாக்கவிட்டு அவர் தன் வழியே சென்று விட்டார்.



எமது தமிழீழ விடுதலைப் போராட்டப் பாதையில் இச்சம்பவங்களினால் ஏற்பட்ட சிக்கல்கள் பின்விளைவுகள் சாதாரணமானவையல்ல; இந்தச் சம்பவத்தை ஏதோ தற்செயலாக நடந்த ஒன்றாக ஈழத்தேசிய விடுதலை முன்னணி சமாதானம் சொல்லி மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

திம்புப் பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்ட இறுதி நாளன்று இலங்கையில் இராணுவத்தால் எமது மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து அறிக்கை வெளியிடவேண்டும் என்று தமிழ்ப் பிரதிநிதிகள் முடிவெடுத்தபோது பேச்சுவார்த்தையைப் பகிஸ்கரிப்பதற்கான அந்த அறிக்கையைப் படிக்க ஈழத் தேசிய விடுதலை முன்னணி பின் நின்றதால் எமது கழகத்தின் பிரதிநிதியான எமது அரசியல் பிரிவுச் செயலர் தோழர் இரா.வாசுதேவாதான் கழகத்தின் சார்பில் அந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

திம்புப் பேச்சுவார்த்தை முறிவடைந்தபின் இந்திய அரசைக் கண்டித்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி வெளியிட்ட அறிக்கைகளும், எமது பிரச்சினையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பாக, ஈழத் தேசிய விடுதலை முன்னணி மேற்கொண்டுவரும் போக்கும், எமது விடுதலைப் போராட்ட நலன்களுக்கும், மக்களின் நலன்களுக்கும் பெரும் பாதிப்பை உண்டாக்கி வருகின்றன.

www.tamilarangam.net



இன்றைக்கு எமது நாட்டில் நிகழ்த்தப்பட்ட படு கொலைகளுக்கு தாங்கள் காரணமல்ல என்று ஈழத்தேசிய விடுதலை முன்னணி பொய்யான அறிக்கையை வெளி யிட்டுதப்பித்துக் கொள்ள முனையலாம்; பெயர் தெரி யாத ஏதோ ஒரு சிறுகுழுவின்மீது இக்குற்றத்தைச் சுமத்த லாம்.

ஆனால் உண்மையை என்றைக்கும் மறைக்க முடியாது. ஒரு சில மாதங்களுக்குமுன் அநுராதபுரத்தில் ஒன்றுமறி யாத அப்பாவிச் சிங்கள மக்களை ஈழத் தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்கம் சுட்டுக் கொன்றபோது, ஈழத் தேசிய விடுதலை முன்னணி அதைமூடி மறைத்துக் கண்டன அறிக்கையை வெளியிட்டு இருந்தது. ஆனால் இன்று உண்மை பகிரங்கப்படுத்தப் பட்டுள்ளது.

எனவே எனது அன்பான தமிழ் மக்களே! சிறிது மனம்விட்டுச் சிந்தித்துப்பாருங்கள்! இத்தகைய தனிமனித படுகொலைகள் எமது விடுதலைக்கு எந்த வகையில் உதவும்? இன்றைக்கு இவர்களை நோக்கி நீண்ட துப்பாக் கிகள் நாளை உங்களை நோக்கி நீள எவ்வளவு நேரம் எடுக்கும்?

இன்றைக்கு நீங்கள் இந்த படுகொலைகளை எதிர்த்துக் குரல்கொடுக்காவிட்டால், இந்தப் பிற்போக்குச் சக்தி களை இனங்கண்டு ஒதுக்கித்தள்ளி, சரியான தலைமை யின்கீழ் அணிதிரளாவிட்டால், எமது இனத்தின் எதிர் காலமே கேள்விக்குறியாகும் என்பதனை மறந்துவிடா தீர்கள். கடந்த காலங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி யினர் இத்தகைய தனிமனிதப் படுகொலைகளைக் கண்டிக் காமல் மௌனம் சாதித்து வந்ததால், இன்றைக்கு அவர் களுக்கே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலை உங்களுக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அரச



கூலிப்படைகளும் உங்களைத் துப்பாக்கி முனையிலேதான் நிறுத்திக் கேள்வி கேட்கின்றன, விடுதலை இயக்கங்கள் என்று சொல்கின்றவர்களும் துப்பாக்கிமுனையிலேதான் உங்களை நிறுத்திப் பணம், நகை என்பவற்றை வசூலிப் பதாக இருந்தால் அவர்களுக்கும், இவர்களுக்கும் என்ன வித்தியாசம்? எமது போராட்டத்திலே எங்கள் நண்பன் யார்? எதிரி யார்? என்பதனைச் சரியாக இனம்கண்டு கொள்ளவேண்டும். எமது நண்பனாக நடித்து எமது இனத்தின் அழிவுக்கு வழிவகுப்பவர்களை இனங்கண்டு இன்றே இப்போதே தூக்கியெறியவேண்டும். சுய விளம் பரத்திற்காகச் செய்யப்படுகின்ற உணர்ச்சிவசப்பட்ட சிறுசிறு தாக்குதல்களால் எமது இனத்திற்குப் பேரழிவு தான் ஏற்படுமேயன்றி எமது போராட்டத்திற்கு வெற்றி கிடைத்துவிடாது என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஆவது உணர்ந்து கொள்ளுங்கள்.

எனவே தமிழீழப் போராட்டத்தில் புகுந்துள்ள பிற்போக்குவாதிகளை இனங்கண்டு ஒதுக்கித்தள்ளி ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், ஏகாதிபத்திய அடிவரு டிகளுக்கு எதிராகவும், அணிதிரண்டு, கிளர்ந்தெழுந்து, எமது போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாகமுன்னெடுப்போம். போராட்டத்திலுள்ள தடைக் கற்களைத் தகர்த்தெறிவோம். சிங்கள முற் போக்குச்சக்திகளுடன் இணைத்து சர்வதேச முற்போக்குச் சக்திகளின் ஆதரவைப் பெற்று எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்போம். தொடர்ந்தும் நீங்கள் பார்வையாளராக இருக்காதீர்கள், பங்களாராக மாறுங்கள். உங்களது கண்டனங்களும், எழுச்சியும், விடுதலை இயக்கங்கள் என்ற போர்வையில் செயல்படும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகளை விரட்டியடிக்கட்டும்.

நன்றி. வணக்கம்.

www.tamilarangam.net



# திம்புப் பேச்சுவார்த்தை தொடர்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்கள் 10-8-85 அன்று நாட்டுமக்களுக்கு விடுத்த செய்தி.

பூட்டானின் தலைநகரான திம்புவில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான 2ஆம் கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் இத்தருணத்தில் உங்களின் அனேகமானவர்களின் எதிர்பார்ப்புக்கும், நம்பிக்கைகளுக்கும், விமர்சனங்களுக்கும், உரித்தான ஒரு ஸ்தாபனத்தின் செயலதிபர் என்ற வகையிலே சில வார்த்தைகள் பேசலாம் என்றிருக்கிறோம்.

இன்றைச்குத் திம்புவில் நடைபெறும் இப்பேச்சுவார்த்தையைப் பற்றி எத்தனையோ அபிப்பிராயங்கள், கருத்துக்கள், அறிக்கைகள் எல்லாம் ஏற்கனவே பல்வேறு இயக்கங்களாலும், பல்வேறு தலைவர்களாலும் வெளியிடப்பட்டு விட்டன. இந்த நிலையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்வி உங்கள் மனதினின்று வெளிப்படுவதை நாமறிவோம்.

அதேவேளை எமது கழகம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தையிலே கலந்து கொண்டு அற்ப சொற்ப சலுகைகளை ஏற்றுக்கொண்டு 'தேர்தலிலே போட்டியிடப் போகிறதென்று சில பிற்போக்குவாதிகள் எம்மை விமர்சிப்பதாகவும் அறிகின்றோம்.

உண்மையில் நாமென்ன செய்யப்போகிறோம்? என்ற கேள்விக்கு விடையளிக்குமுன்பு நாம் எதற்காகப் போராடுகிறோம் என்பதைத் தெளிவாகவும், அழுத்தம் திருத்தமாகவும் சொல்லிவைக்க வேண்டியுள்ளது.

ஏதோ ஆயுதப் படைகளை எதிர்த்துப் போராட வேண்டுமென்பதற்காகவோ, இராணுவமுகாம்களையும், பொலிஸ் நிலையங்களையும் அழித்து எங்களை விளம்பரம் செய்ய வேண்டுமென்பதற்காகவோ, அநாவசியமாக ஒரு நாட்டைத் துண்டாடவேண்டும் என்பதற்காகவோ நாம் இந்த ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை.

மிக நீண்ட காலமாகவே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டு; உயிரையும், உடமைகளையும், மானத்தையும் இழந்து அநாதைகளாக, அரசியல் அகதிகளாக ஆக்கப்பட்ட எமது தமிழ் தேசிய இனத்தின் இன்னலைப் போக்கவும், இழந்தஉரிமைகளை மீட்டெடுக்கவும்,உலகிலுள்ள ஏனைய மக்களுக்கு சரிநிகர் சமானமாக எமது மக்களுக்கும் எல்லா உரிமைகளையும் பெற்று தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் இந்த ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டு வருகிறோம்.

அதிலும் இழந்த எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்காகப் பல்வேறு கோணங்களில் பல்வேறு அரசியல் தீர்வுகளை முன்வைத்து எமது மக்கள் நடாத்திய போராட்டங்கள் எல்லாம் மழுங்கடிக்கப்பட்டுத் தோல்வியைத் தழுவிய நிலையிலே எமது இனத்தின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிட்ட ஒரு துர்பாக்கியமான சூழலிலே தான் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதுவும்

www.tamilarangam.net



இலங்கைத் தீவில் தமிழ் தேசியஇனம் தன்மானத்தோடு வாழ வேண்டும் என்றால் அதற்கு தமிழீழத்தைத் தவிர வேறு வழியில்லை. தமிழீழம் ஒன்றுதான் எமது பிரச்சினைக்கான இறுதித்தீர்வு என்ற நிலை ஏற்பட்டபின்பு தான் நாம் இந்தத் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

நாம் போராட வேண்டும் என்பதற்காக தமிழீழம் கேட்கவில்லை. அதே நேரம் உலகில் தமிழனுக்கு ஒரு நாடு வேண்டும் என்பதற்காகவும், தமிழீழம் கேட்கவில்லை. எமது மக்களுடைய அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுடைய உயிருக்கும், உடமைகளுக்கும், மானத்துக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். இது தமிழீழ மக்கள் ஜனநாயக குடியரசு ஒன்றை நிறுவுவதன் மூலம்தான் சாத்தியமாகும் என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்ட பின்தான் நாம் இந்தத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட எமது விடுதலைப் போராட்டமானது இன்று ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக மாற்றப்பட்ட ஒரு கால கட்டத்திலேதான் எமது எதிரி இன்று திம்புவிலே பேச்சுவார்த்தை நடாத்த எம்மை அழைத்திருக்கிறான்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கான அழைப்புக் கிடைத்தவுடன் எமது சகோதர இயக்கங்கள் தாங்கள் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளப் போவதில்லை என அறிக்கைகள் விடுத்திருந்தன. பின்னர் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும்போது இந்தியஅரசு எம்மை வலியுறுத்தியது, எனவேதான் நாம் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கிறோம் எனப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டன.

ஆனால் எமது கழகம் அவசரப்பட்டு போகமுடியாது என்றும் அறிவிக்கவில்லை; அதேசமயம் போகப் போவ



தாகவும் அறிவிக்கவில்லை. இந்திய அரசு எங்களுடைய ஆலோசனையையும், அபிப்பிராயங்களையும் கேட்டதேயன்றி எந்தவிதத்திலும் எம்மை நிர்ப்பந்திக்கவில்லை.

நாம் இப்பேச்சுவார்த்தை தொடர்பாகச் சரியான மதிப்பீட்டைக் கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும். இப்பேச்சுவார்த்தையின் முக்கிய சக்திகளாக விளங்கக்கூடிய எமது எதிரியையும், இந்திய மத்திய அரசையும், எமக்காகக் குரல் கொடுக்கக்கூடிய இந்திய மக்களையும், நாம் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியையும் வெகு உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்ற முற்போக்குச் சக்திகளையும். மற்றும் எமது பிரச்சினையில் அக்கறையுள்ள உலகநாடுகளின் போக்கையும் நாம் மிகச் சரியாகவே எடை போட்டோம்.

இப்பேச்சுவார்த்தை தொடர்பாக எமக்கு ஏற்படக்கூடிய சாதகமான விளைவுகளையும், மற்றும் பாதகமான விளைவுகளையும் மிகத் துல்லியமாக எடைபோட்டுப் பார்த்தோம்.

சிறீலங்கா அரசு பலமுறை பேச்சுவார்த்தை எனக்கூறி எமது மக்களையும், தலைவர்களையும் ஏமாற்றியிருக்கிறது. சிறீலங்கா ஆட்சியாளர்கள் எமக்கு நீட்டும் நேசக் கரங்களுக்குப் பின்னால் கொடுமையான அடக்குமுறைக் கரங்கள் இருக்கின்றன.

கூட்டப்படும் ஒவ்வொரு வட்டமேசை மாநாட்டு முடிவிலும் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் சட்ட திட்டங்கள் அரங்கேற்றப்பட்டு இருக்கின்றன. எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் நாம் பேச்சுவார்த்தை மேடைக்குச் சென்றிருக்கின்றோம்.

www.tamilarangam.net



இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதினால் நாம் எமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டோம் என்று அர்த்தமல்ல. தமிழீழ மக்கள் ஜன நாயகக் குடியரசு ஒன்றை நிறுவுவது என்ற இலட்சியத்தை நாம் கைவிடப் போவதில்லை. அந்த இலட்சியத்தை ஈடேற்றுவதற்கான எமது ஆயுதப் போராட்டத் தயாரிப்புகளையும் நாம் தொடர்ந்து செய்துகொண்டே தான் வருகின்றோம். எந்தவொரு இனப்பிரச்சினை யிலும், அரசியல் ரீதியான தீர்வு, இராணுவத் தீர்வு என்று இருவகையான தீர்வுகள் இருக்கின்றன. அரசியல் ரீதியான தீர்வு தோல்வியடைந்தபின் இராணுவ ரீதியிலான தீர்வு ஏற்படுவதும் உண்டு. இருபக்கமும் இராணுவ சமபலம் உள்ள சந்தர்ப்பத்தில் இராணுவப் போராட்டத்தின் பின் அரசியல் தீர்வு ஏற்படுவதும் உண்டு.

எமது மக்களின் அடிப்படை உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக ஆயுதம் ஏந்திய நாம் ஒரு அரசியல் தீர்வின்மூலம் இந்த அடிப்படை உரிமைகள் நிரந்தரமாகப் பாதுகாக்கப்படுமாக இருந்தால் அரசியல் தீர்வு சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு அதுபற்றிப் பேசுவதற்குத் தயாராக உள்ளோம்.

இப்பேச்சுவார்த்தையில் எமது அடிப்படை உரிமை களுக்கு குறைந்தபட்ச எந்தவொரு அரசியல் தீர்வையும், நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதேசமயம் தமிழீழத்திற்கு வெளியில் வாழும் தமிழ்-முஸ்லிம் மற்றும் மலையக மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பாது காக்கும் வகையிலும் அமையாத அவர்களுக்குத் துரோகம் செய்யக்கூடிய எந்தவிதமான தீர்வுகளையும் நாம் அங்கீ கரிக்க மாட்டோம் என உறுதியுடன் கூறிக்கொள் கிறோம்.



வெளியில் இயக்கங்களுக்கிடையில் பல்வேறு முரண் பாடுகள் இருந்தபோதிலும், மாநாட்டு மேசையில் நாம் பெரும்பாலும் அனைத்து இயக்கங்களுடனும் ஒற்றுமை யைப் பேணுவதில் முன்னின்றிருக்கிறோம். தொடர்ந்து வரும்பேச்சுவார்த்தைகளிலும் இத்தகைய ஒற்றுமைகளை பெரும்பாலும் தொடர்ந்து பேணுவதிலும் முன்நிற் போம். கடந்த பேச்சுவார்த்தையில் எமது இயக்கத்தின் சார்பில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் எமது அரசியற் செயலர் தோழர் வாசுதேவாவையும், வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் எமது அரசியல் பேச்சாளர் தோழர் சித்தார்த்தரையும், அனுப்பியிருந்தோம். தற்போது இஸ்லாமிய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தோழர் முகமட் பிரேம் நவாஸ் என்பவரையும் அனுப்பி வைத்துள்ளோம்.

கடந்த பேச்சுவார்த்தையில் ஏற்கனவே 1984ல் நடந்த வட்டமேசை மகாநாட்டின்போது தமிழ் பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்ட தீர்வுகளையே சிறீலங்கா அரசு மீண்டும் முன்வைத்தது அதனை மற்ற இயக்கங்களுடன் சேர்ந்து நாமும் நிராகரித்ததோடு சில குறைந்தபட்ச கோரிக்கைகளையும் முன்வைத்தோம்.

எமது அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள் ளாத நிலையிலேயே சிறீலங்கா அரசு 2ஆம் கட்டப் பேச்சு வார்த்தைக்கு வந்துள்ளது. எமது எதிரி தொடர்ந்தும், அவநம்பிக்கையூட்டும் விதத்தில் நடந்து வருகின்ற போதிலும் நாம் தொடர்ந்தும் நம்பிக்கையுடனேயே செயற்படுகின்றோம். ஏனென்றால் இப்பேச்சுவார்த் தையில் வெற்றியும், தோல்வியும் எமக்குச் சாதகமான தாகவே அமையும்.

எமது கழகத்தைப் பொறுத்தவரையில் எமது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவுவது என்ற எமது

www.tamilarangam.net



லட்சியப் போராட்டத்தில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். இந்த முன்னேற்றத்திற்கான உந்து சக்தியாக பேச்சுவார்த்தைகளின் வெற்றியையும் தோல்வியையும் சரியான முறையில் நாம் பயன்படுத்துவோம்.

அதே சமயம் இப்பேச்சு வார்த்தையின்மூலம் கிடைக்கும் கால அவகாசத்தைப் பயன்படுத்தி எதிரி தன்னைப் பலப்படுத்திக் கொள்வான். என்கின்ற ஒரு ஐயப்பாடும் பலருக்கு உண்டு. உண்மையில் சர்வதேச பிற்போக்குச் சக்திகளின் பக்கபலத்தோடு எமது போராட்டத்தை ஒடுக்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் எமது எதிரியை வெறும் உணர்ச்சிவசப்பட்ட தாக்குதல்களாலோ, பழிவாங்கும் நடவடிக்கைகளாலோ வெற்றி கொள்ள முடியாது என்பதை நாம் நன்கு அறிவோம்.

இப்பேச்சுவார்த்தையை அடித்தளமாகக் கொண்டு செயற்படும் எதிரியை நாமும் இனவாத நோக்கத்துடனேயே எதிர்ப்போமாக இருந்தால் நிட்சயமாகத் தோல்வியையே தழுவிக் கொள்வோம். எமது எதிரிக்கிடையிலுள்ள முரண்பாடுகளேதான் எமது வெற்றிக்கான அத்திவாரமாகும். நாம் பழிவாங்கும் உணர்ச்சியில் மேற்கொள்ளும் இனவாதத் தாக்குதல்கள் எதிரியை மேலும் ஒருமைப்படவும், மேலும் பலமுள்ளவனாக்கவும் உதவுமென்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிங்கள முற்போக்குச் சக்திகளின் ஆதரவோடு உலக முற்போக்கு இயக்கங்களின் பக்கபலத்தோடும் நாம் எமது மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என உறுதி கூறுகின்றோம்.

எம்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும் நாம் என்றைக்கும் துரோகம் செய்ய மாட்டோம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

*தமிழீழ விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் எமது வெளியீடுகள்:*

- புதிய பாதை
- தமிழீழத்தின் குரல்
- ★ SPARK
- ★ PLOT — BULLETIN

www.tamilarangam.net

# "தமிழீழத்தின் குரல்"

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்

## அதிகாரபூர்வ வானொலி

## ஒலிபரப்பு

அலைவரிசை: 49—6800—6900

41—7080—7120

சனி: காலை 8- 9.30 மாலை 4—5.30

ஞாயிறு: காலை 8—9.30 மாலை 4—6.30

புதன்: காலை 7—8.30 மாலை 4—5.30

வெளியீடு: செய்தித் தொடர்புத் திணைக்களம்,

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், 21-09-85.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்